இணைந்து எங்கெல்லாம் end point sales இருக்கிறதோ, அங்கெல்லாம் check செய்து தரமான மீன்களைத்தான் கொடுக்கிறார்கள். அதனால் வீண் வதந்தியைக் கண்டிப்பாக நம்பத் தேவையில்லை. வெளி மாநிலங்களிலிருந்து வருகிற மீன்கள், பொதுவாக மதுரையிலிருந்து transportation செய்யப்பட்டு, வருகின்ற வழியில் 2, 3 நாட்கள் ஆவதால் அது கெட்டுப்போகிற நிலை இருக்கிறது. அதை seize செய்து, மார்க்கெட்டில் விற்காத அளவுக்கு அரசு நடவடிக்கை எடுத்தது. அதைத்தான் ஊடகங்களில் formalin என்று பெரிய அளவில் விளம்பரப்படுத்தினார்கள். அது formalin கிடையாது. எந்த அமிலமும் கிடையாது. மீனை தைரியமாகச் சாப்பிடுங்கள். மீனைச் சாப்பிட்டால் கண்டிப்பாக நீங்கள் 100 வருடங்கள் நீண்ட ஆயுளோடு வாழலாம், வாழ்த்துகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

79—

மகளிர் தங்கும் விடுதி

***38457—திரு. சி. சந்திரசேகரன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை–செம்மேடு பகுதியில் மகளிர் தங்கும் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

(அ) மற்றும் (ஆ) சமூக நலத் துறையின்கீழ் 18 மாவட்டங்களில், 28 அரசு பணிபுரியும் மகளிர் விடுதிகள் துவங்கப்பட்டு தற்போது செயல்பட்டு வருகின்றன. சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதி, கொல்லிமலை-செம்மேடு பகுதியில் தொழில் நிறுவனங்கள் எதுவும் இல்லாததால், இங்குள்ள பெண்கள் பணிபுரிவதற்கு வெவ்வேறு இடங்களுக்கு இடம்பெயர்கின்றனர். எனவே, சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை-செம்மேடு பகுதியில் பெண்களுக்கு தங்கும் விடுதி அமைக்கும் தேவை ஏதும் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன் அவர்கள்.

திரு. சி. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்ணை விட்டுப் பிரிந்தாலும், மக்கள் மனதில் என்றைக்கும் நீங்கா இடம் பெற்றிருக்கின்ற இதய தெய்வம் அம்மா தெய்வத்தை வணங்கியும், பாரத ரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தெய்வத்தை வணங்கியும், அந்த இருபெரும் தெய்வங்களினுடைய அருளாசியோடு, மாண்புமிகு இதய தெய்வம் இந்த நாட்டு மக்களுக்கு என்னென்ன திட்டங்களைத் தந்தார்களோ, அயராது பாடுபட்டு, தினந்தோறும் ஆயிரம் கோப்புகளில் கையொப்பமிட்டு, அனைத்துத் திட்டங்களையும் தமிழக மக்களுக்காக நிறைவேற்றித் தந்து, மக்கள் விரும்பும் முதல்வராக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களை வணங்கியும், (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு உறுதுணையாக இருந்து பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களை வணங்கியும், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குவதோடு, தங்களையும் வணங்குகிறேன்.

[*2020 மார்ச் 12*

இன்றைக்கு, கொல்லிமலையில் 100-க்கு 99 சதவிகிதம் மலைவாழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அங்குள்ள மலைப் பகுதியில் தொழிற்சாலை இல்லை என்று சொன்னாலும், அங்கே மூன்று மேல்நிலைப் பள்ளிகளும், இரண்டு நடுநிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் அரசு மருத்துவமனை ஆகியவை இருக்கின்றன. இப்படி பல்வேறு அரசு அலுவலகங்களில் இன்றைக்கு பெண் பணியாளர்கள் அதிகளவில் இருப்பதால், அவர்கள் தங்குவதற்கு போதிய இடவசதி இல்லாமல் 30, 40 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கின்ற நாமக்கல், சேந்தமங்கலம் பகுதிகளில் தங்கியிருந்து, மீண்டும் பணிக்கு மலைப் பகுதிக்கு வருகின்றனர். எனவே, அங்கேயிருக்கின்ற கல்வி வளர்ச்சியைக் கருதியும், மலைவாழ் மக்களின் நலன் கருதியும், அங்கே பெண்கள் தங்கும் விடுதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தர ஆவன செய்வார்களா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் நலம் என்பது தமிழக அரசின் வளர்ச்சித் திட்டங்களில் இதயமாகத் திகழ்கிறது. பெண் குழந்தைகள், மகளிர் மற்றும் சமூகத்தில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளவர்களின் மேம்பாட்டினை உறுதிசெய்யும் வகையிலும், நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை (*Sustainable Development Goals*) எட்டும் வகையிலும், தமிழக அரசின் மகளிர் நலத் திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை-செம்மேடு பகுதியில் அரசுப் பணியில் பணிபுரிகின்ற மகளிருக்கு தங்கும் விடுதி கட்டப்படுமா என்று சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார். துறை ரீதியாக ஆய்வு மேற்கொண்டு, அந்த ஆய்வின் அடிப்படையில் அங்கே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்

2020 மார்ச் 12]

அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சமீபத்தில் தொடங்கி வைத்த கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பள்ளிகள் மற்றும் அரசு அலுவலகங்களில் பணிபுரிகின்ற மகளிருக்காக விடுதிகள் வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. சி. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 5 ஆம் தேதி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சேந்தமங்கலம் பகுதிக்கு வருகை தந்து, 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட அரசு கலைக் கல்லூரி கட்டடத்தைத் திறந்து வைத்தார்கள். அதேபோல, நேற்றையதினம் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கொல்லிமலையில், பாரம்பரிய பல்லுயிர் பூங்கா அமைப்பதற்கு 3 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து தந்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அங்கே பெண்கள் தங்கும் விடுதி கட்டுவதற்குப் பரிசீலனை செய்கிறேன் என்று மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்; அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் கட்டடம் கட்டுவதற்குப் போதுமான நிலம் கொல்லிமலையின் தலைமையிடமான செம்மேட்டில் இருக்கிறது. அந்த நிலங்களை தங்களுக்கு நாங்கள் எடுத்துக் கொடுக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்வதோடு, நிலங்களைக் கொடுத்த பிறகு, இந்த ஆண்டே ஆய்வு செய்து, இந்த நிதியாண்டிலேயே அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம், நிறுவனங்கள் சட்டம், 2013–ன்படி, சிறப்பு நோக்கு சாதனமாக* Special Purpose Vehicle *உருவாக்கப்பட்டுள்ளது. நவீன வசதிகளை உள்ளடக்கிய பணிபுரியும் மகளிர் விடுதிகளைக் கட்டுதல், மேம்படுத்துதல், வடிவமைத்தல், புதுப்பித்தல்,செப்பனிடுதல்போன்றபணிகளைமேற்கொள்வதுஇதன் நோக்கமாகும். இந்நிறுவனத்தின் மூலமாக திருச்சி அபிஷேகபுரம், கிருஷ்ணகிரி, ஓசூர், செங்கல்பட்டு, கூடுவாஞ்சேரி மற்றும் தாம்பரம் ஆகிய இடங்களில் பணிபுரியும் மகளிருக்காக மகளிர் விடுதிகளை நவீன வசதிகளுடன் அமைக்க மாண்புமிகு அம்மாவின் அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கின்றது. அந்த வகையில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, அம்மாவின் அரசு கனிவோடு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கொல்லிமலை என்பது ஒரு முக்கியமான மலை. விஞ்ஞான ரீதியில் பார்த்தால்கூட அதிகமான மூலிகைகள் கிடைக்கின்ற இடம். ஆன்மிக முறையில் பார்த்தால் சித்தர்கள் இருக்கின்ற இடம். இன்னும் விஞ்ஞானத்தின் இரகசியங்கள் நிறைய பொதிந்திருக்கின்ற இடம். அங்கே மகளிர் தங்கும் விடுதி மட்டுமல்ல, வேறு எந்த விடுதியும் இல்லை. ஒரேயொரு* hotel*–தான் இருக்கின்றது. அதுவும்* costly hotel. *பொதுக் கணக்குக் குழுக் கூட்டம் நடத்துவதற்காக சமீபத்தில் அங்கே நாங்கள் போகின்றபோது அரசாங்கத்தின் சார்பிலே தங்குவதற்கு எந்த இடமும் இல்லை.*

2020 மார்ச் 12]

ஆனால், இப்பொழுது கொல்லிமலையின் இரகசியம் தெரிந்தோ அல்லது பெருமை தெரிந்தோ நிறையபேர் அங்கு போகிறார்கள். ஆகையினால், அம்மையாருடைய இலாகா என்றாலும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, அரசாங்கத்தின் சார்பில் இவ்வளவு முக்கியமான ஒரு மலையில் நீங்கள் தங்கும் விடுதிகளைக் கட்ட வேண்டும். அதேபோன்று ஏலகிரியிலும் கட்ட வேண்டும். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் ஒருவர் அங்கு ஓர் ஓட்டலை வைத்திருக்கிறார். அதனால் அது பாதிக்கப்படும் என்று நினைக்கிறேன். (சிரிப்பு) First class hotel, Sir. *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பார்க்கவில்லையே!* Super. *(குறுக்கீடு) உங்களுக்கு விளம்பரம்தானே சார். (குறுக்கீடு) ஓட்டலுக்கு விளம்பரம்தானே! அதைப்போன்று கட்ட வேண்டும். உள்ளபடியே கொல்லிமலையினுடைய இரகசியங்கள் இப்போதுதான் மக்களுக்குப் புரிகின்றன. எனவே, அருள்கூர்ந்து மற்றவர்களும் அங்கு தங்குவதற்கு வேண்டிய கட்டடத்தைக் கட்ட வேண்டுமென மாண்புமிகு அவை முன்னவர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்கள்.*

திரு. ஆ. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கழகத்தினுடைய தலைவர் அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், துணைக் கேள்வி கேட்க வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பூந்தமல்லி தொகுதி, தொழிற்பேட்டைகள் நிறைந்த தொகுதி. குறிப்பாக, அங்கே பெண் பணியாளர்கள் பணியாற்றுகிறார்கள். நிறைய நிறுவனங்களில் குறைந்த சம்பளத்திற்காக பெண்களையே பணியமர்த்துகிறார்கள். அந்தப் பெண்கள் வாங்கும் சம்பளம் ரூ.5,000/–, ரூ.6,000/, ரூ.8,000/–தான். அந்த ரூ.8,000/– சம்பளத்தில் அவர்கள் வீட்டு வாடகை கட்டுவதற்கே ரூ.2,000/– செலவாகிறது. அவர்கள் வீட்டிற்கு சம்பளத்தை முழுமையாகக் கொடுக்க முடியவில்லை. குறிப்பாக, தாழ்த்தப்பட்ட பெண்கள் அதிகமானோர் வேலை செய்கின்ற அந்தப் பகுதியில் அரசு ஒரு மகளிர் விடுதியைக் கட்டி அந்தப் பெண்களுக்குப் பாதுகாப்பையும், வாடகை கொடுப்பதிலிருந்து சேமிப்பையும் ஏற்படுத்தித் தருமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழகத்தில் முந்தைய ஆட்சியில் 8 மகளிர் தங்கும் விடுதிகள் மட்டுமே இருந்த நிலையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2013 ஆம் ஆண்டு விதி 110-ன்கீழ், 20 மகளிர் தங்கும் விடுதிகள் அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டதன்பேரில், செங்கல்பட்டு, சோழிங்கநல்லூர், ஸ்ரீபெரும்புதூர் ஆகிய மூன்று இடங்களில் ஒவ்வொரு விடுதியிலும் 50 பேர் தங்குவதற்கான கட்டடங்கள் வடிவமைக்கப்பட்டு, சொந்த நிலம் தேர்வு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நிலம் தேர்வு செய்யப்பட்டுவிட்டது. அங்கு உடனடியாகக் கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசு ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) பூந்தமல்லிக்கும் சேர்த்துதான். (குறுக்கீடு) 50–க்கும் மேற்பட்ட மகளிர் தங்கக்கூடிய சூழ்நிலை இருக்குமாயின், பூந்தமல்லியில் தனியாக ஒரு மகளிர் தங்கும் விடுதி அமைக்க சாத்தியக்கூறுகள்

இருக்கின்றனவா என்பதைத் துறை ரீதியாக ஆய்வு செய்து, அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு இதுகுறித்து அறிவுரைகளை வழங்கியிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே சொன்னதுபோல, Special Purpose Vehicle மூலம், தற்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிறைய தொழிற்சாலைகளைத் தொடங்கவிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், தொழில் துறையுடன் இணைந்து ஆய்வு செய்து, எந்தெந்த இடங்களில் மகளிர் தங்கும் விடுதிகள் அமைக்கப்பட வேண்டுமோ, அந்தந்த இடங்களில் மகளிர் தங்கும் விடுதிகளை அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த வகையில், பூந்தமல்லி சட்டமன்றத் தொகுதியினுடைய உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.

திரு. எ.பி. சக்திவேல்: மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மகளிருக்காக பல்வேறு நலத் திட்டங்களைத் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருந்தார்கள். அந்தவகையிலே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய வழியிலே, தற்போது மகளிருக்கான திட்டங்களை எண்ணற்ற அளவில் வாரி வழங்கி வருவதோடு, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பிறந்த தினமான பிப்ரவரி 24 ஆம் தேதியினை, ‘மாநில பெண்கள் பாதுகாப்பு தினமாக’ அறிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு பெருமை சேர்த்துக் கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், எனக்குப் பேச வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லையென்றாலும்கூட, அவசியம் கருதி இந்தக் கேள்வியைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்கிறேன்

சேலம் மாநகரைப் பொறுத்தவரையில், அங்குள்ள அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் முழுமையான அளவிலே சொந்தக் கட்டடங்கள் இல்லை. சில மையங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன, அவை பழுதடைந்தும் இருக்கின்றன. சேலம் மாநகரப் பகுதியில் இருக்கின்ற அங்கன்வாடி மையங்களிலே பயில்கின்ற குழந்தைகளெல்லாம், கூலித் தொழிலாளர்கள், நெசவுத் தொழிலாளர்களுடைய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்; அவர்கள் தங்கள் குழந்தைகளை அங்கே பயில வைக்க வருகின்றனர். எனவே, புதிய கட்டடங்களைக் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், சேலம் மாநகராட்சியின் சார்பில், சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற அங்கன்வாடி மையங்களுக்கு தனி குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் இணைப்பினை வழங்குவதோடு, குடிநீர் சுத்திகரிப்பு கருவியினையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இதுவரை 9 அங்கன்வாடிக் கட்டடங்கள் புதிதாகக் கட்டப்பட்டிருக்கின்றன. அந்தக் கட்டடங்களுக்கும் குடிநீர் இணைப்பினை வழங்குவதோடு, சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் குடிநீர் இணைப்பினை வழங்கி, சுத்திகரிப்பு கருவியினையும் வழங்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அங்கன்வாடி மையங்களைப் பராமரிப்பதற்காக, பழுதடைந்த ஒவ்வொரு அங்கன்வாடி மையத்திற்கும் 2 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்கிறது. பழுதடைந்த அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் பழுது நீக்குவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகி, அந்த நிதியினைப் பெற்று, பயன்படுத்தி, அங்கன்வாடி மையங்களைப் பழுது நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டதன் அடிப்படையில், உள்ளாட்சித் துறையோடு கலந்தாலோசித்து,

2020 மார்ச் 12]

அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய அங்கன்வாடி மையம் கட்ட வேண்டுமென்றால், I.C.D.S., *அதாவது, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 2 இலட்சம் ரூபாயும், மாவட்ட ஆட்சியர் நிதியிலிருந்து 1,50,000 ரூபாயும் மற்றும்* MGNREGS*–ன்கீழும் நிதி பெறப்படுகிறது. இவ்வாறு மூன்று வகைகளாக நிதியினைப் பெற்று கட்டலாம். மேலும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் அங்கன்வாடி மையங்கள் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மேற்காணும் நிதி ஆதாரங்களைப்பயன்படுத்தி, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அங்கன்வாடி மையங்களைச் சரி செய்துகொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

80—

காகித ஆலை

***54347—திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம் பகுதியில் காகித ஆலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் புதியதாக காகித ஆலை அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.